DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 79/2019**

Deposition of Witness for : PW 1
Name : வேலுச்சாமி
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Date : 22.04.2025

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 22nd April 2025

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 10.08.1974 தேதியிட்ட முத்துலட்சுமி அம்மாளிடமிருந்து தபசில் சொத்தினை வாதி பெற்ற கிரைய ஆவணத்தின் சார்பதிவக உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** 26.06.1996 தேதியிட்ட ராமசாமி கோனார் என்பவரின் மகன் வேலுச்சாமி என்பவரிடமிருந்து பிரதிவாதி பெற்ற கிரைய ஆவணத்தின் சார்பதிவக உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** தபசில் சொத்திற்கு வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.1597 ன் கணினி நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 07.07.2005 தேதயிட்ட வாதி தபசில் சொத்தினை சர்வேயர் மூலமாக அளப்பதற்கு மேல்முறையீடு செய்த விண்ணப்பம் நகல் மற்றும் செல்லான் நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(வா.சா.ஆ.4 ஆவணம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

5. 14.09.2017 தேதியிட்ட வாதி வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட முன்னறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 23.09.2017 தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. பிராது தபசில் சொத்துக்களை காண்பிக்கும் மாதிரி வரைபடம் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. பிராது தபசில் சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு கணினி நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ 1 ஆகவும்,** நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2 ஆகவும்,** நில அளவையரின் வரைபடம் **நீ.ம.சா.ஆ.3 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**